## கோவையில் 10 வயது சிறுமி கடத்தி கொடூரக் கொலை!

# புதிய அரசு பொறுப்பேற்ற 12 நாளில் 30 பெரிய குற்றங்கள் நிகழ்வு!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அதிர்ச்சி அறிக்கை!

**சென்னை, மே 25 -**

**“கோவையில் 10 வயது சிறுமி கடத்திக் கொடூரக் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்த மிருகத் தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் த.வெ.க. அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கோவையில் 10 வயது சிறுமி, கடத்தி கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்தக் கொலைச் சம்பவத்துக்கு உண்மையான நீதி வேண்டும் என்ற குரல், எல்லாப் பக்கமும் ஒலிக்கிறது.

இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிற இந்தக் கொடூரச் சம்பவத்தைக் கண்டித்து, கோவை மக்கள் விடிய விடிய போராட்டம் நடத்துகிறார்கள். இந்த மிருகத்தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்.

**சிறுமியின் பெற்றோருக்கு கழகம் துணையாக நிற்கும்!**

இந்த இக்கட்டான நேரத்தில், சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, கழகம் அவர்களுக்குத் துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 12 நாட்களில் பாலியல் வன்கொடுமை, கஞ்சா கடத்தல், ரவுடிகள் தாக்குதல், ஆளுங்கட்சியினரின் அத்துமீறிய அராஜகம், தற்போது கோவை சிறுமி கடத்தி கொலை உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட பெரிய நிகழ்வுகள் செய்திகளாக வந்து கொண்டே இருப்பது, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை கேள்விக் குறியாக்கி உள்ளது.

இனி ஒரு சம்பவம் இதுபோல் நடக்காமல் இருக்க சட்டம் ஒழுங்கிற்கு முதல் முக்கியத்துவத்தை முதல்வர் தர வேண்டும் என தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கத்தை, கத்தையாக பணத்தை எண்ணும் த.வெ.க. வேட்பாளர்!

### வீடியோ பாடலுடன் வைரல்!

*விழுப்புரம், மே 25 -*

விழுப்புரம் த.வெ.க. மாவட்டச் செயலாளர் கட்டை பையில் கத்தை கத்தையாக தேர்தலுக்கு பணம் வாங்கியதாகவும், அவர் முன்பாக இந்த பணத்தை எண்ணுவது போல் வீடியோ ஒன்று வைரலாகி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி அமைத்துள்ள த.வெ.க. நிர்வாகிகள் பல்வேறு மாவட்டங்களில் அட்ராசிட்டியிலும், அரசு அலுவலகங் களில் அத்துமீறலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே விழுப்புரம் மாவட்டத்தில் அரசுப் பதவிகளுக்கு பேரம் பேசி பணத்தை வசூலிப்பதாக த.வெ.க. மாவட்டச் செயலாளர் குஷிமோகன் மீது புகார்கள் குவிந்து வருகிறது.

இந்நிலையில் தவெக மாவட்ட செயலாளர் குஷிமோகன் முன்பு ஒரு கட்டை பையில் கத்தை, கத்தையாக பணம் எண்ணும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் சோபாவில் த.வெ.க. மாவட்டச் செயலாளர் குஷிமோகன் உட்கார்ந்திருப்பது, அவருக்கு முன்னால் ஒரு கட்டைப்பையில் கத்தை, கத்தையாக 500 ரூபாய் நோட்டு பண்டல்கள் அடுக்கிவைத்து எண்ணப்பட்டு வருகின்றன. இந்த வீடியோவிற்கு மாட்டிக்கினாரு, மாட்டிக்கினாரு ஒருத்தரு என்று பாடலை போட்டும், ரூ.50 லட்சம், ரூ.20 லட்சம் வசூல் என்று பதிவிடப்பட்டு சமூகவலைதளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

**நகராட்சி ஆணையருக்கு உத்தரவுபோடும் குஷிமோகன்!**

இதுகுறித்து த.வெ.க. வட்டாரத்தில் கூறுகையில், “நடந்து முடிந்த தேர்தலில் விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்ட குஷிமோகன் பிரச்சாரம் எதுவும் செய்யாமல் மற்ற வேட்பாளர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு ஒதுங்கி விட்டார்.

அப்போது பெற்ற பணத்தை உடனிருந்தவர்களே வீடியோ எடுத்து தற்போது வைரலாக்கி வருகிறார்கள்” என்றனர்.

சமீபத்தில் விழுப்புரம் அம்மா உணவகத்தில் அத்துமீறி ஆய்வு என்ற பெயரில் அடாவடி செய்ததாகவும், நகராட்சி ஆணையருக்கு உத்தரவு போட்டதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

தோற்றாலும் நான் தாம்பா எம்.எல்.ஏ. என்பதைபோல் த.வெ.க. மாவட்டச் செயலாளர் அலப்பறை செய்து வருவதாக கூறப்படும் நிலையில் தற்போது தேர்தலின்போது கத்தை, கத்தையாக பணம்பெற்ற வீடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# த.வெ.க. அரசில் 4 பவர் சென்டர்கள்!

### அதிகாரிகள் நியமனத்தில் கடும் இழுபறி!

**சென்னை, மே 25-**

**த.வெ.க. அரசில் தற்போது 4 பவர் சென்டர்கள் உருவாகியிருப்பது தெரியவந்துள்ளது. இந்த பவர் சென்டர்கள் மூலமாகவே அமைச்சர்கள், அதிகாரிகள் நியமனம் நடைபெற்றுள்ளது. இதனால் முடிவெடுப்பதிலும், அதை அமல்படுத்துவதிலும் கடும் குழப்பம் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் யாரும் எதிர்பாராத விதமாக த.வெ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காததால் இழுபறி ஏற்பட்டு ஆட்சியை அமைத்துள்ளனர். தேர்தல் முடிவுகள் 4ம் தேதி அறிவிக்கப்பட்டது. 10ம் தேதிதான் பதவி ஏற்பு விழா நடைபெற்றது.**

பதவி ஏற்கும்போது 9 அமைச்சர்கள் மட்டுமே பதவி ஏற்றனர். அதன்பின்னர் கடந்த 21ம் தேதி 2வது முறையாக பதவி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. அப்போது 23 அமைச்சர்கள் பதவி ஏற்றனர். காங்கிரசைச் சேர்ந்த 2 பேர் பதவி ஏற்றனர். பின்னர் விசிக, ஐயுஎம்எல் கட்சியைச் சேர்ந்த தலா ஒருவர் என விஜய்யையும் சேர்த்து மொத்தம் 35 பேர் பதவி ஏற்றுள்ளனர். அமைச்சர்கள் நியமனத்தில் கடுமையான குழப்பம் நிலவியதாக கூறப்படு கிறது. அதிகாரிகள் நியமனத்தி லும் குழப்பம் நிலவி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் 4 பேர் பவர் சென்டர்களாக இருப்பதுதான்.

விஜய், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி என 4 பேர் பவர் சென்டர்களாக உள்ளனர். இவர்கள் நான்கு பேர் மூலமாகத்தான் பலர் அமைச்சர் பதவியை பிடித்துள்ளனர். குறிப்பாக வேட்பாளர் தேர்விலும் இந்த மோதல் எதிரொலித்துள்ளது. இந்த 4 பவர் சென்டர் தவிர, செங்கோட்டையன் தனியாக ஒரு ரூட் போட்டு இந்த 4 பவர் சென்டர்களிடம் தன்னுடைய ஆதரவாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்துள்ளாராம்.

வேட்பாளர் தேர்வை புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா ஆகியோர்தான் செய்துள்ளனர். இந்தப் பட்டியல் ஜான் ஆரோக்கியசாமியிடம் சென்றுள்ளது. அவர் சில மாற்றங்களை செய்துள்ளார். கடைசியாக விஜய்யிடம் சென்றுள்ளது. அவரும் சில வேட்பாளர்களை மாற்றியுள்ளார்.

இதேபோலத்தான் அமைச்சரவை நியமனத்திலும், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா ஆகியோர்தான் அமைச்சர்களை தேர்வு செய்து, அவர்களுக்கான இலாகாக்களை தேர்வு செய்துள்ளனர். பின்னர் இந்தப் பட்டியல் விஜய் கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர் ஜான் ஆரோக்கியசாமியிடம் பேசி, பட்டியலை இறுதி செய்துள்ளார். இறுதி செய்த பட்டியல் தான் கடைசியாக புஸ்ஸி ஆனந்திடம் வழங்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. புஸ்ஸி ஆனந்த் தயாரித்த அமைச்சரவை பட்டியல், விஜய்யிடம் சென்ற பின்னர் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதனால் அமைச்சராகப் போகிறவர்களிடம் விஜய்யே போன் செய்து பேசி, ஏதோ தான் மட்டுமே பட்டியல் தயாரித்ததுபோல அவர்களிடம் பேசியுள்ளார்.

ஆனால், அவர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி மூலம் பதவி பெற்றது அவர்களுக்கு மட்டுமே தெரியும் என்பதால் அவர்களும் விஜய் மட்டுமே பதவி கொடுத்துபோல நடித்துள்ளனர். அதாவது நடிகனிடமே அமைச்சர்கள் நடித்துள்ளனர். அதேபோல இலாகா விவகாரத்திலும் அப்படியே நடந்துள்ளது. அதில் விஜய், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் ஆகியோர் அமைச்சர்களாகிவிட்டாலும், ஜான் ஆரோக்கியசாமி அமைச்சராகவில்லை. ஆனால் அவர் அமைச்சரவையில் நடப்பது தெரிந்து கொள்வதற்காக தன்னுடைய ஆளாக நிர்மல் குமாரை நியமித்துள்ளாராம். இந்த 4 பவர் சென்டர்கள், அதிகாரிகள் நியமனத்திலும் முடிவுகளை எடுக்கிறார்களாம். தலைமைச் செயலாளர், டிஜிபி ஆகி யோரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. அவர்களில் தலைமைச் செயலாளர் சாய்குமார், ஜூலை மாதத்தில் ஓய்வு பெறுகிறார். இதனால் அதுவரை தான் தலைமைச் செயலாளராக இருக்கிறேன் என்று விஜய்யிடம் கூறியுள்ளார்.

அதை அவரும் ஏற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனத்தைப் பொறுத்தவரை தலைமைச் செயலாளர் சாய்குமார், மாறுதல் பட்டியலை தயாரித்து முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார். அங்கு சில மாற்றங்கள் செய்யப்பட்டோ அல்லது அப்படியேவாகவோ பைல் வருகிறது. ஆனால் முதல்வரின் அலுவலகம் செல்லும் பைல் 3 நாட்களுக்குப் பிறகுதான் தலைமைச் செயலகத்துக்கு திரும்பி வருகிறதாம். சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜும், விஜய்யும் ஒரே சர்ச்சுக்கு செல்கிறவர்கள். இதனால் அந்த சர்ச் பங்குதந்தை கூறியதால் நேரடியாக விஜய்யே தேர்வு செய்தாராம்.

ஆனால் மற்ற பதவிகளைப் பொறுத்தவரை ஆளாளுக்கு பரிந்துரை செய்கிறார்களாம். கடைசியில் விஜய் முடிவு செய்கிறாராம். ஆனால் பதவி ஏற்பு விழாவில், இந்த ஆட்சியைப் பொறுத்தவரை ஒரே பவர் சென்டர் தான் மட்டுமே என்றார். ஆனால் அப்படி இல்லை என்கின்றனர் அதிகாரிகள். சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜின் பைல் கடந்த திங்கட்கிழமையே முதல்வர் அலுவலகம் சென்றதாம். ஆனால் வியாழக் கிழமைதான் பைலுக்கு விஜய் ஒப்புதல் கொடுத்ததை உதாரணமாக கூறுகின்றனர். பைல்கள் தாமதமாவதோடு முடிவுகளை யும் எடுக்க முடியாமல் திணறி வருகிறார்களாம்.

தமிழகத்தில் போலீஸ் அதிகாரிகள் மாற்றம் நடைபெறவில்லை. செயலாளர்கள் மாற்றம் நடைபெறவில்லை. இதற் கெல்லாம் காரணம் இந்த காலதாமதம்தான் என்கின்றனர் அதிகாரிகள். இதே நிலைமை நீடித்தால், ஜெயலலிதா ஆட்சியை விட மோசமான நிலைக்கு விஜய் ஆட்சி செல்லும் என்கின்றனர் தலைமைச்செயலக அதிகாரிகள்.

## தஞ்சை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# எம்.ரெங்கசாமி தாயார் ம.ஜெயலெட்சுமி அம்மாள் மறைவு!

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு நேரில் அஞ்சலி!

*தஞ்சாவூர் மே.25*

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், மலையர் நத்தம் மறைந்த கோ.மருதையா வன்னியர் மனைவியும், தஞ்சை முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பாபநாசம் சட்டமன்ற தொகுதியின் தேர்தல் பொறுப்பாளருமான ம.ரெங்கசாமி, ம.சம்பத் (எ) வெங்கடாசலம், ம.சுரேஷ் (எ) கோவிந்தசாமி இவர்களின் தாயாருமாகிய ம.ஜெயலெட்சுமி அம்மையார் (வயது 102) அவர்கள் 23.05.2026 காலை 10.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவுச் செய்தியறிந்த கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் தி.பழநிவேல், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், சு. கல்யாண சுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கே.டி.மகேஸ் கிருஷ்ணசாமி, டி.கே.ஜி.நீலமேகம், திருச்சி மேயர் அன்பழகன், மாநகரச் செயலா ளர்கள் சு.ப. தமிழழகன், சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அம்மையாரின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தஞ்சாவூர் தளவாபாளையம் ரோடு, வீரையா நகர் இல்லத்தில் உள்ள அம்மையாரின் உடல் நேற்று 24.05.2026 மாலை 4.30 மணியளவில் தஞ்சாவூர் வீரையா நகரில் இறுதிச் சடங்கு நடத்தப்பட்டு அவரது சொந்த ஊரான மலையர் நத்தம் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## கொள்முதல் செய்யாததால்

# 10 நாட்களாக டிராக்டரிலேயே காத்துக் கிடக்கும் நெல்மூட்டைகள்!

### ‘ரீல்ஸ்’ ஆட்சியின் அவலம்! விவசாயிகள் வேதனை!

திருவள்ளூர், மே 25 –

நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யாததால், 10 நாட்களாக டிராக்டரில் தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள் வீணாகி வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள தாமரைப்பாக்கம் நெல்கொள்முதல் மையத்திற்கு, புன்னப்பாக் கம், மாகரன், அமணம்பாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து, விவசாயிகள் 20க்கும் மேற்பட்ட டிராக்டர்க ளில் நெல் மூட்டைகளை கொண்டு வந்துள்ளனர். ஆனால், அங்கு ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூட்டைகள் திறந்த வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கொண்டு வந்துள்ள நெல் மூட்டை களை அதிகாரிகள் கொள்முதல் செய்யவில்லை என தெரிகிறது.

இதனால், 10 நாட்களுக்கும் மேலாக டிராக்டரில் உள்ள நெல்மூட்டை களுடன், விவசாயிகள் காத்துக்கிடக்கின்றனர்.

இதனால், நெல் மூட்டைகள் மழை, வெயில் போன்றவற்றால் நெல் மூட்டைகள் வீணாகி வருவதாகவும் வேதனை தெரிவித்தனர். மேலும், தினசரி டிராக்டர் வாடகையாக ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதுகுறித்து விவசாயி கள் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பிய போது, புதிய ஆட்சி வந்துள்ளதால், நெல் கொள்முதல் செய்ய இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என தெரிவித்ததாக கூறினர்.

இதற்கிடையில், நெல் மூட்டைகளை அரசு கொள்முதல் செய்யும்போது எடை போடும் பணியில் உள்ள ஊழியர்களுக்கு ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் வசூலிக்கப்படுவதாகவும், தமிழ்நாடு முழுவதும் இந்த வசூல் நடைபெறுவதா கவும் விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

## குன்னம் சட்டமன்றத் தொகுதி

# வாக்காளர்களுக்கு எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. நன்றி!

*குன்னம், மே. 25-*

குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களிடம் ஆண்டிமடம் குன்னம் தொகுதி வேட்பாளராக உங்களை நாடி வந்த எனக்கு, 4வது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து ‘செந்துறை’ பகுதி மக்கள், வெற்றி வாய்ப்பை வழங்கியுள்ளீர்கள்.



செந்துறை பகுதிக்கு என்றும் நன்றிக்கடன் உள்ளவனாக, மக்கள் பணி செய்வேன். மேலும் நான் இப்பகுதியில் அரசுப் பேருந்து பணிமனை, 110 KV தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம், தரமான சாலை வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, புதிய பேருந்து வசதிகள் என செந்துறை மக்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளேன்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கான குரலாக சட்டமன்றத்தில் நான் உங்களின் குரலாக ஒலித்திடுவேன் என கூறினார்.

பின்னர் தமது தொகுதிக்கு உட்பட்ட செந்துறை ஒன்றியம் பழமலைநாதபுரம், பாலையூர், நமங்குணம், சொக்கநாதபுரம், நக்கம்பாடி, நிண்ணியூர், இலைக்கடம்பூர், பெரியாக்குறிச்சி, நயினார்குடிகாடு, கஞ்சமலைப்பட்டி, குறிச்சிகுளம், ஆர்.எஸ்.மாத்தூர், அசாவீரன்குடிகாடு, மாராக்குறிச்சி, இருங்களாக்குறிச்சி, பூமுடையான்குடிகாடு, துளார், மருங்கூர், பொன்பரப்பி, விழுப்பணங்குறிச்சி, போன்குடிகாடு, சிறுகளத்தூர், சேடக்குடிகாடு, பாசாளம், நல்லநாயகபுரம், உஞ்சினி, சிறுகடம்பூர், செதலவாடி, பெரிய ஆணந்தவாடி, சின்ன ஆணந்தவாடி, சோழங்குறிச்சி, கீழராயம்புரம் உள்ளிட்ட கிராமங்களில் வீதி வீதியாக சென்று வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார், பொது மக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் தேமுதிக மாவட்ட செயலாளர் துரை.அய்யப்பன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், வழக்கறிஞர் பொன்.செல்வம், தேமுதிக ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.